தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அனைத்துலகத் தேர்வு

# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 12

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. குமரி முதல் இமயம் வரை முன்னாளில் தமிழர் வாழ்ந்த பகுதி இவ்வாறு அழைக்கப்பட்டது.

   அ) குமரிக்கண்டம் ஆ) நாவலந்தீவு இ) இந்தியா ஈ) ஆரியநாடு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. ஈரான் ஈராக் நாடுகளில் மந்தை மேய்த்த நாடோடிக் கூட்டம் எவ்வழியால் தமிழகத்துள் நுழைந்தது?

   அ) கைபர்கணவாய் ஆ) சிந்துவெளி
   இ) இந்துக்குசுமலை ஈ) இந்துமாவாரி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழக அரசுகளை வீழ்த்த ஆரியம் சூழ்ச்சியாகக் கையாண்ட கருத்து

   அ) பொருள்முதற்கோள் ஆ) அறநெறி
   இ) யாவரும் கேளிர் ஈ) நிலையாமை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பொற்றொடி ஆடினாள். இற்றொடரில் வரும் பொற்றொடி என்னும் சொற்றொடர்

   அ) அன்மொழித்தொகை ஆ) வேற்றுமைத்தொகை
   இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நால்வருணத்தை உருவாக்கிய ஆரியர் தமிழரைத் தாழ்த்த தமிழருக்கு வழங்கிய வருணம்

   அ) பிராமணர் ஆ) வணிகர் இ) சத்திரியர் ஈ) சூத்திரர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. இவனுடைய காலத்தில் தமிழகத்தில் ஆரியம் முழுமையாக இடம்பிடித்தது

   அ) அருண்மொழித்தேவன் ஆ) இராசேந்திரன்
   இ) சேரன்செங்குட்டுவன் ஈ) கரிகாலன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஆரியருடைய இருக்கு வேதத்தில் சிவனைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

   அ) முதல் இறைவன் ஆ) தமிழ் இறைவன்
   இ) திருடர் தலைவன் ஈ) பேய்க்கடவுள்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. சொல்லணிக்கு எடுத்துக்காட்டு

அ) மோனை எதுகை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உயிர்மெய் ஈ) சீர்தளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. வினைத்தொகைக்கு எடுத்துக்காட்டு

அ) ஓடாதநீர் ஆ) ஓடுநீர் இ) ஓடியநீர் ஈ) நீரோடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. **குறள்:-** மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் ________________ வரின்

கோடிட்ட இடத்தில் இடம்பெறவேண்டிய சொல்

அ) இழிவு ஆ) மானம் இ) பழிச்சொல் ஈ) நாணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. வாரணம் பொருத மார்பு இச்சொற்றொடரில் இடம்பெற்றுள்ள அணி

அ) தற்குறிப்பேற்றம் ஆ) உருவகம் இ) உவமை ஈ) உயர்வு நவிற்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. உலகின் முதன்மொழி தமிழ் என நிறுவியவர்

அ) தேவநேயப்பாவாணர் ஆ) பரிதிமாற்கலைஞர்
இ) தனிநாயகம் அடிகளார் ஈ) மறைமலை அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஐம்படைத்தாலி அணிந்தவனும் பால்மணம் மாறாத இளமையுடையவனாய் இருந்தும் போர்க்களத்தில் ஏழு மன்னரை வென்றவன்

அ) இராசராசசோழன் ஆ) நெடுஞ்செழியன்
இ) வெற்றிவேற்செழியன் ஈ) சேரலாதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. மாதவி கோவிலுக்குச் செல்லும்போது மல்லிகை அணிந்திருந்தாள். இங்கே மல்லிகை என்பது

அ) சினையாகுபெயர் ஆ) தொழிலாகுபெயர்
இ) காலவாகுபெயர் ஈ) பொருளாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மானத்தைக் காப்பதற்காக வடக்கு நோக்கி சாவுவரை உண்ணாநோன்பு இருப்பதை இவ்வாறு அழைப்பர்.

அ) நோன்பிருத்தல் ஆ) சாகவிருத்தல்
இ) வடக்கிருத்தல் ஈ) வடக்கேயிருத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. எண்பேராயத்துள் இடம்பெறுவோரில் இவுளிமறவரும் அடங்குவர். இவுளிமறவர் என்றால்

அ) போர்வீரர் ஆ) குதிரைவீரர் இ) யானைவீரர் ஈ) தளபதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. சாரியைகளுக்கு எடுத்துக்காட்டு

அ) உறு தவ ஆ) தான் தோறும் இ) அத்து அற்று ஈ) அன் அள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. உருவக அணிக்கு எடுத்துக்காட்டு

அ) முகத்தாமரை ஆ) முல்லைப்பல் இ) வானவில் ஈ) கார்மேகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. வான் மழை வழாது பெய்க! இச்சொல்லியம்

அ) வியப்பு ஆ) ஏவல் இ) கூற்று ஈ) வியங்கோள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மதிக்காக எடுக்கப்பட்ட இளவேனில் விழாவிற்குரிய பெயர்

அ) மதிவிழா ஆ) நிலாவிழா இ) கடலாடுவிழா ஈ) இந்திரவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. செயப்படுபொருள் குன்றியவினைக்கு எடுத்துக்காட்டு

அ) அழுதான் ஆ) படித்தான் இ) அழுதுகொண்டு ஈ) படித்தவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. குன்றுகளில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ

அ) கார்த்திகைப்பூ ஆ) குறிஞ்சிப்பூ

இ) முல்லைப்பூ ஈ) காட்டு மல்லிகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. அறத்தின் முறைமையில் ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்ட அதிகாரம்

அ) கள்ளாமை ஆ) கள்ளுண்ணாமை
இ) வெகுளாமை ஈ) பிறனில்விழையாமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. தெரிநிலைவினைச் சொல்லுக்கு எடுத்துக்காட்டு

அ) வந்தன ஆ) பாய்குதிரை இ) நல்லவன் ஈ) வெண்முகில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. அடுக்கிடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) உயரஉயர ஆ) தொணதொண இ) நடுநடுங்கி ஈ) கல்விகேள்வி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தரப்பட்டுள்ள சொற்றொடர்களில் மரபு வழுவமைதிச்சொல்

அ) ஆடும் மயில் ஆ) கத்தும் குயில் இ) பாடும் குயில் ஈ) கரையும் காகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. காற்சங்கிலி என்பது இவ்வகைப் புணர்ச்சி

அ) தோன்றற்புணர்ச்சி ஆ) கெடுதற்புணர்ச்சி

இ) திரிதற்புணர்ச்சி ஈ) இயல்புப்புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. முன்னாளில் ஆண்பிள்ளைகளுக்கு போர்க்கருவிகளின் மாதிரிகளைக் கோத்து தாலி அணிவித்தனர். அதன்பெயர்

அ) போர்த்தாலி ஆ) வீரத்தாலி இ) ஐம்படைத்தாலி ஈ) தாலிக்கொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பார்ப்பார் என்று இன்று ஆரியப்பிராமணரைக் குறிக்கும் சொல் முன்னாளில் குறித்தது

அ) அந்தணரை ஆ) பார்ப்போரை இ) புலவரை ஈ) மூத்தோரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்?

அ) நால்வகை ஆ) அறுவகை இ) எண்வகை ஈ) பலவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, முழுவிடை தருக.

பண்டைத் தமிழகத்திலே மானமும் வீரமும் உயிரைவிட உயர்ந்ததாகக் கருதப்பட்டது. அதிலும் நாட்டுக்காகச் சாவது பெரும்பேறு எனக் கருதினர். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் அத்தகைய மறவுணர்வு உள்ளவர்களாகவே இருந்தனர். ஒரு மறக்குடியிலே வண்டார்குழலி என்றொரு பெண். அவள் கணவன் வில்லவன்கோதை, மாற்றார் படையெடுத்து வருவது கேட்டுச் சினந்தெழுந்து போருக்குப் புறப்பட்டான். அந்தப் பெண்ணுக்கு ஒரேயொரு மகன். அவன், அப்பா! நானும் போருக்கு வருகிறேன் என்று புறப்பட்டான். தாய் அவனைக் கட்டியணைத்து என் மகனே! நாட்டைக் காக்க நீயும் போருக்குப் போகத்தான் வேண்டும். நாட்டுக்காகப் போரில் உயிர் விட்டால் தானடா பெருமை. நீ பெரியவனானதும் போருக்குப் போகலாம் வா! உன் அப்பா வென்று வருவார் என்று மகனை அணைத்து மகிழ்ந்தாள். போர்க்களத்திலே சூறாவளியாய் சுழன்று, தன் வாள்வீச்சின் திறத்தால் வீரம் காட்டி மாற்றார் படைகளை கண்டதுண்டமாக்கி வெற்றிக்கொடியை நாட்டினான் வில்லவன்கோதை. இருந்தும் போர்க்களத்தில் மார்பில் வேல்தாங்கி வீழ்ந்துபட்டான். மறுநாளும் போர் முரசம் கேட்டது. தோற்றோடிய பகைவர் மீண்டும் நாட்டைத் தாக்க வருவதைக் கேள்விப்பட்டாள் வண்டார்குழலி. மகனை அழைத்தாள். மகனே! நேற்று உன் அப்பா நாட்டிற்காய் துறக்கம் அடைந்தார். இதோ இன்றும் போர் முரசம் கேட்கிறது. போருக்குப் போய், தமிழினத்தின் வீரத்தை மாற்றாருக்குக் காட்டு! என்று சிறுவனுக்கு வட்டுடை அணிவித்து வாள் கைக்கொடுத்து, போய் வா மகனே! பகைவரை வென்று வா மகனே! என உச்சிமோந்து அனுப்பிவைத்தாள். போர்க்களத்தில் அவள் மகன் பகைப்படையை கொன்றொழித்து, பகைவர் யானைகளை வேல்கொண்டு தாக்கியழித்து வீரம் காட்டும் செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. ஈன்றபொழுதிற் பெரிதுவந்து மகனுக்காகக் காத்திருந்தாள். ஆனால், வந்ததோ மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டு இறந்தான் என்ற செய்தி. வண்டார்குழலி சீற்றம் கொண்டாள். முதுகில் புண்பட்டு என்மகன் இறந்திருப்பானானால், அவனுக்குப் பாலூட்டிய என் மார்பை அறுத்தெறிவேன் எனச் சூளுரைத்துப் போர்க்களம் சென்றாள். போர்க்களத்தில் குவிந்து கிடந்த உடல்களிடையே தன்மகனைத் தேடினாள். மகனே! என்று கூவினாள். அம்மா! வாழ்கிறேன் அம்மா வீரனாக, என்ற குரல் கேட்டு ஓடிச்சென்று மகனைப் பார்த்தாள். அவன் மார்பில் வேல் பாய்ந்து வீழ்ந்து கிடக்கிறான். வாரியெடுத்து மடிமேல் கிடத்தி மகனே! மார்பில் வேல் துளைத்துக் கிடக்கிறதே வலிக்கவில்லையா உனக்கு என்றாள். அப்படியா! அம்மா நான் அதை உணரவில்லையே என்று சொல்லி மடிமீது உயிர்விட்டான். தன் மகனை இழந்துவிட்டபோதிலும் போர்க்களத்தில் தன் மகன் வீரம் காட்டி மார்பில் விழுப்புண் பெற்றதை எண்ணி இறும்பூது எய்தினாள் வண்டார்குழலி.

1. பழந்தமிழகத்தில் பெண்கள் எத்தகையவர்களாய் இருந்தனர்?

2. மகனைப் போருக்கு அனுப்பியபோது தாய் என்ன கூறியனுப்பினாள்?

3. வண்டார்குழலி சீற்றம் கொண்டதேன்?

4. போரிலே மகன் சாவடைந்தபோதும் வண்டார்குழலி இறும்பூது எய்தினாள். ஏன்?

5. வீரச்சாவடைந்த சிறுவனின் தந்தை பெயர் என்ன?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினாக்கள் - ஐந்திற்கும் முழுவிடை தருக.

1. சிறுவனான நெடுஞ்செழியன் போர்க்களத்தில் நின்ற காட்சியை விளக்குக.

2. வடக்கிருத்தல் என்றால் என்ன? விளக்குக.

3. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் - இக்குறளுக்கு விளக்கவுரை தருக.

4. தென்றல் வரவில் தென்றல் எவ்வாறு வந்து சாளரத்தினுள் எப்படி நுழைகிறது?

5. பழந்தமிழர் நிலங்களுக்கும் பொழுதுக்கும் பெயரிட்ட மாண்பினை விளக்குக.

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று
நடந்ததெல்லாம் நினைப்பதுதான் துயரம் என்று
ஞானிகளும் மேதைகளும் சொன்னார் அன்று

பிறந்து வந்தபோது நெஞ்சம் திறந்திருந்தது
பிள்ளையோடு தெய்வம் வந்து குடியிருந்தது
வயது வந்த பிறகு நெஞ்சில் மயக்கம் வந்தது- அங்கு
வாழ்ந்திருந்த தெய்வம் கொஞ்சம் விலகிச் சென்றது

உச்சி வெய்யில் சூரியனை மேகம் மூடுது- நம்
உள்ளம் என்னும் சூரியனைக் கோபம் மூடுது
காற்று வந்தால் மறுபடியும் மேகம் ஓடுது
பேசிக் கலந்துவிட்டால் கோபம் மாறி நேசமாகுது

பிள்ளைகளாய் இருந்தவர் தான் பெரியவரானார்- அந்தப்
பெரியவர்கள் கோபத்தினால் சிறியவரானார்
கள்ளமில்லா உள்ளத்தினால் பிள்ளைகளெல்லாம் - என்றும்
கணணெதிரே காணுகின்ற தெய்வங்களானார்

1. குழந்தையும் தெய்வமும் எத்தகைய குணத்தால் ஒன்று?

2. நல்ல உள்ளமெனும் கதிரவனை (சூரியனை) மூடுவது என்ன?

3. பிள்ளைகளெல்லாம் எதனால் தெய்வமாகக் காணப்படுகின்றனர்?

4. பிள்ளைகளாய் இருந்து பெரியவரானவர்கள் எவ்வாறு சிறியவர் ஆயினர்?

5. பிள்ளையின் உள்ளத்தில் வாழ்ந்திருந்த தெய்வம் எப்போ விலகிச் சென்றது?

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. இலக்கிய அடிப்படையில் மொழியிலுள்ள பெயர்ச்சொற்கள் நால்வகை. அவற்றைத் தந்து, எடுத்துக்காட்டுடன் விளக்குக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. தற்குறிப்பேற்ற அணி, உயர்வுநவிற்சி அணி இவற்றுக்குரிய வேறுபாட்டை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. கெடுதல், திரிதல், தோன்றல் புணர்ச்சிகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________________________________________

_______________________________________________

4. பின்வரும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

பளபள:_______________________________________

ஏங்கிஏங்கி:____________________________________

இன்பம்துன்பம்:_________________________________

வாய்மூத்தல்:___________________________________

கன்னங்கரிய:___________________________________

5. பால் வழுவமைதி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 15)

6) தரப்பட்டுள்ள பந்தியை தமிழ்மொழிக்கு மாற்றுக.

German philosopher Albert Switzer is a great philosopher. He has read many books and gave his comments. Thirukural was his favourite among the books he read. He said he had not come across anything greater than Thirukural in this world. Particularly he was attracted by the topic on "polite Words" in "Thirukural". Meaning of family life is welcoming those in hunger and give them food. He praises Tiruvalluvar for his new idea for hospitality. Those who have no kindness in their heart will not give anything for others. Kind-hearted people would give even their bones to others if needs be. This also impressed Schweitzer very much.

Albert Schweitzer est un grand philosophe allemand. Il a lu énormément de livres qu'il a commenté par la suite. Parmi ceci, Thirukural était son favori. Il n'existe guère dans la littérature du monde, un recueil dans lesquelles on trouve cette haute sagesse que dans Thirukkural". Il a aimé surtout la partie "des mots polis". La vie est faite pour nourrir les personnes qui ont faim. Albert félicite pour sa nouvelle pensée sur l'hospitalité. Ceux qui n'ont pas la bonté ne feront rien pour les autres. Les personnes généreux donneront leurs os pour les autres. Même ces phrases ont fasciné Schweitzer

Der deutsche Wissenschaftler Albert Schweitzer war ein Professor. Er hatte viele verschiedene Bücher gelesen und seine Meinung dazu geäußert. Dabei hat ihm Thirukkural sehr gut gefallen. Er hat noch nie ein Buch auf der Welt mit so tollen Aussagen gelesen, sagte er. Die weisen Wörter, welche die Kurals besagen, beeindruckten ihn sehr. Wir leben um hungernden Menschen Essen zu geben und sie willkommen zu heißen. Er lobte, dass das was Thiruvalluvar über Gastfreundschaft geschrieben hat, eine neue Sichtweise sei. Ein Mensch mit schlechtem Herzen würde keinem etwas ausgeben. Ein Mensch mit gutem Herzen würde, falls es nötig sei, seine letzten Knochen geben um anderen zu helfen. Auch diese Aussage hat Schweitzer sehr beeindruckt.

(புள்ளிகள் 05)

7) முந்நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

1. தமிழர் இறைநெறியுள் ஆரியம் ஊடுருவல்.

2. பாடநூலின்படி தமிழர் வீரம்.

3. முட்கம்பி வேலிகளும் வன்னிமக்களும்.

4. கைய்ட்டி ( Haiti ) பூகம்பம். ஐசலாந்து ( Island) எரிமலைக் குமுறல். இவற்றுடன் இணைத்து உலகின் எதிர்காலம் பற்றிய உமது எண்ணங்களைத் தருக.

(புள்ளிகள் 20)